# கருஞ்சட்டைத் தமிழர்

மாதம் இருமுறை

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

• மலர்:6 இதழ்: 24 • திருவள்ளுவர் ஆண்டு 2048 • மார்ச் 1-15, 2017 • விலை:ரூ.5 • Volume:6 Issue:24 • March 1-15, 2017 • Price:Rs.5


## தமிழகத்தின் இன்றைய சூழலில்

# சில கேள்விகள்



சுப.வீரபாண்டியன்

### 1 ரகசிய வாக்கெடுப்பு கூடாதா?

தமிழ்நாடு சட்டமன்றத்தில் இதுவரை ரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை. அப்படியிருக்க இப்போது மட்டும் ஏன் ரகசிய வாக்கெடுப்பு? ரகசிய வாக்கெடுப்பு நடத்தினால், கொறடாவின் ஆணையை மீறியவர்கள் யார் யார் என்று எப்படித் தெரியும்?

மேற்காணும் வினாக்கள் நியாயம் போலத் தெரியலாம். ஆனால் உண்மை வேறு மாதிரி இருக்கிறது.

இதுவரையில் தமிழகத்தில் ரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை என்பது உண்மைதான். இதுவரை அப்படி ஒன்று கோரப்படவில்லை என்பதும் உண்மை. அவ்வாறு கோரிக்கை எழுந்தால் , அதனை ஏற்கவே கூடாது என்று விதிகள் ஏதுமில்லை என்பதும் உண்மை.

சாதாரண சூழலில்தான் சாதாரண விதிகள் பொருந்தும். இப்போது ஓர் அசாதாரண சூழல் நிலவுகின்றது. இதுபோல் நிலைமைகள் இருந்த நேரங்களில் எல்லாம் வேறு விதமாக முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. 1998 இல், உ.பி.யில் ஒரே கட்சியைச் சேர்ந்த கல்யாண் சிங் மற்றும் ஜெகதாம்பிகா பால் ஆகியோரிடையே பிளவு ஏற்பட்டபோது, கூட்டு நம்பிக்கை வாக்கெடுப்பு (composite trust vote) எடுக்குமாறு உச்ச நீதிமன்றம் கூறியது. அது ரகசிய வாக்கெடுப்புதான்.

அந்த வாக்கெடுப்பு அந்த இரு பிரிவினருக்கு இடையில் மட்டுமே நடக்கும். அவர்களுள் கூடுதல் உறுப்பினர்களின் ஆதரவு யாருக்கு இருக்கிறதோ, அவர்களை ஆட்சி அமைக்க ஆளுநர் அழைப்பார். ஒருவேளை அவர்களின் வாக்குகள் பிரிந்து, முதன்மை எதிர்க்கட்சியின் எண்ணிக்கையை விடக் குறைந்திருக்குமானால், தனிப் பெரும் கட்சியாக உள்ள எதிர்க்கட்சியை ஆட்சி அமைக்க அழைக்க வேண்டும். ஏன் இந்த நடைமுறை இங்கு பின்பற்றப்படவில்லை?

ரகசிய வாக்கெடுப்பில், கொறடா ஆணை நிறைவேறியுள்ளதா என்று தெரியாது எனக் கவலைப்படுகின்றனர். முதலில் அவர்களுக்குள் ரகசிய வாக்கெடுப்பு நடந்திருக்குமானால், இந்தக் கேள்வியே எழாது. அது மட்டுமின்றி, இப்போது வெளிப்படையாக நடந்த வாக்கெடுப்பில், எதிர்த்து வாக்களித்த 11 பேர் மற்றும் அவைக்கே வராத ஒருவர் மீது ஏன் எந்த நடவடிக்கையும் இல்லை? பன்னீர்செல்வம், பாண்டியராஜன் ஆகிய இருவரும் கட்சியை விட்டு நீக்கப்பட்டு விட்டதால் அவர்களின் மீது நடவடிக்கை எடுக்க இயலாது. சரி, மற்றவர்கள் மீதும் நடவடிக்கை இல்லையே எதனால்?

கட்சிக்கு எதிராகவும், பன்னீருக்கு ஆதரவாகவும் செயல்படும் 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் கட்சி நடவடிக்கை இல்லை. என்ன காரணம்?

### 2 மக்கள் செல்வாக்கு யாருக்கு உள்ளது?

சென்ற தேர்தலில், அ.தி.மு.க. அணி 1.75 கோடி வாக்குகளையும், தி.மு.க. அணி 1.71 கோடி வாக்குகளையும் பெற்றிருந்தன. இப்போது அ.தி.மு.க. இரண்டாகப் பிளவுபட்டு விட்டது. 11 உறுப்பினர்கள் கட்சிக்கு எதிராக வாக்களித்துள்ளனர். ஒருவர் இறந்து விட்டார். ஒருவர் அவைக்கு வரவில்லை. எனவே அவர்கள் வாங்கியிருந்த வாக்குகளில் ஏறத்தாழ 10 லட்சம் வாக்குகள் அதிகாரப்பூர்வமாகப் பிரிந்துவிட்டன. மேலும் பல லட்சம் வாக்குகள் அவர்களை விட்டுப் போய்விட்டன என்பது வெளிப்படை. இந்த சூழலில், மிகுதியான மக்களின் செல்வாக்குப் பெற்றுள்ள கட்சி தி.மு.க.தானே?

### 3 எதிர்க்கட்சிகள் இல்லாமல் வாக்கெடுப்பு நடந்ததில்லையா?

1972இல் எம்.ஜி.ஆர் கட்சியை விட்டு வெளியேறியபின், இப்படி ஒரு நம்பிக்கை கோரும் வாக்கெடுப்பு நடந்தது. அன்று எதிர்க்கட்சிகள் அனைத்தும் வெளியேறிவிட்டன. அப்போது ஆளும் கட்சி மட்டுமே வாக்களித்து, நம்பிக்கை வாக்கெடுப்பில் வென்றது.

அன்று நடந்த அந்த வாக்கெடுப்பு செல்லுமென்றால், இப்போது நடந்த வாக்கெடுப்பும் செல்லும்தானே என்று கேட்கின்றனர். இரண்டுக்கும் இடையில் மிக முதன்மையான ஒரு வேறுபாடு உள்ளது. அன்று எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தன. இன்றோ, தி.மு.க. வெளியேற்றப்பட்டது.

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் காலமும், மக்களும் விடை சொல்லட்டும்! ●

# நாடும் நடப்பும்

## ? பகுத்தறிவு



1.76 லட்சம் கோடி ஊழல் வழக்கு என்று ஊரெல்லாம் அவதூறு பரப்பப்பட்டது முதலில். அது ஊழலோ, லஞ்சமோ இல்லை. அரசுக்கான வருமான இழப்பு என்று விளக்கப்பட்டது பிறகு.

நீதிமன்றத்தில், முதல் தகவல் அறிக்கை, குற்றப் பத்திரிக்கை, இறுதி ஆவணம் சமர்ப்பிப்பு என்று படிப்படியான நிலைகளில், மேலே உள்ள தொகையும் சுருங்கிச் சுருங்கி, இறுதியில் ஒன்றும் இல்லாமல் நீதிமன்றத்தில் நிற்கிறது இப்பொழுது.

அந்த வழக்கு இறுதி நிலையை எட்டி உள்ளது. இன்னும் பல ஆவணங்களை சி.பி.ஐ. வழக்கறிஞர் நீதிமன்றத்தில் முன்வைக்க முடியாமல் இருக்கின்றார். இந்த கட்டத்தில் அதிர்ஷ்டத்தை நம்பவேண்டிய தேவை அவருக்கு வந்திருக்கிறது.

இதோ ஒரு செய்தி,

2G வழக்கு – 23.02.2017 அன்று உச்சநீதிமன்றத்தில்...

நீதிபதியிடம்...

**CBI வழக்கறிஞர்:**

அதிர்ஷ்டம் இருப்பவர்கள் வெற்றி பெறட்டும்.

**முன்னாள் அமைச்சர் ஆ.ராசா:**

ஆவணங்களையும், சட்டத்தையும் மட்டும்தான் நான் நம்புகிறேனே தவிர, அதிர்ஷ்டத்தை அல்ல.

## ? மறுபடியும் முதலில் இருந்தா...



அம்மாவின் அடியொற்றி எடப்பாடி அரசு நடக்கும் என்கின்றனர், அ.தி.மு.க.வினர். அடடா மீண்டும் 100 கோடி ரூபாய் அபராதம் கட்ட வேண்டியிருக்குமே!

## ? பாவம் காந்தியார்



சிறை சென்ற காந்தியார், போஸ் படமெல்லாம் அரசு அலுவலகத்தில் இருக்கலாம். ஜெ படம் மட்டும் ஏன் கூடாதாம்! – அமைச்சர் ராஜேந்திர பாலாஜி. அடடா, என்ன அறிவு!

## ? உள்அரசியல் இருக்கிறதா?



முன்னாள் தலைமைச் செயலாளர் ராம்மோகன் ராவ் வீட்டில் சோதனைகள் நடந்தன. பன்னீர் செல்வத்தின் 'தியானப் புரட்சிக்குப் பிறகு' அதுபற்றியெல்லாம் பேச்சே இல்லையே ஏன்?

## ? என்ன ஆனார் சேகர் ரெட்டி?



சேகர் ரெட்டி என்பவரிடம் 174 கோடி ரூபாயும், 127 கிலோ தங்கமும் கைப்பற்றப்பட்டனவே, அந்த வழக்கு என்ன ஆயிற்று? அவர் யாருடைய பினாமி? அவருக்குப் பின்னால் இருந்தவர்கள் யார் யார்? முதல்வர் எடப்பாடியின் சம்மந்திக்கும் அவருக்கும் என்ன தொடர்பு? ஏன் இந்த வழக்கில் இன்று வரை எந்த முன்னேற்றமும் இல்லை?

---

நாள்: 25.03.2017 மாலை 6 மணி
இடம்: அண்ணா அறிவாலயம்
கலைஞர் அரங்கம், தேனாம்பேட்டை, சென்னை-18



திராவிட இயக்க எழுத்தாளர்
க.திருநாவுக்கரசு
எழுதிய
"தி.மு.க. வரலாறு"
வெளியீட்டு விழா



வரவேற்புரை
மு.சண்முகம்
பொதுச்செயலாளர். தொ.மு.ச. பேரவை

தலைமை:
**இனமானப் பேராசிரியர்**

நூல்களை வெளியிடுபவர்:
கழகச் செயல் தலைவர்
**தளபதி மு.க.ஸ்டாலின்**

கருத்துரை:
**துரைமுருகன் | ஆ.ராசா**
**சுப.வீரபாண்டியன்**

நன்றியுரை: தி.சிற்றரசு (பதிப்பாளர்)



# நடந்ததும் நடந்திருக்கக் கூடாததும்!

சுப.வீரபாண்டியன்

18.02.2017) தமிழ்நாடு சட்ட மன்றத்தில் வாக்கெடுப்பு நடைபெற வேண்டிய நேரத்தில், ஒரு பெரிய துயரம் நடைபெற்று முடிந்திருக்கிறது. அது அனைத்துக்கும் தி.மு.க. மட்டுமே காரணம் என்பது போலச் சில ஊடகங்கள் இன்று செய்தி வெளியிட்டுள்ளன. அது குறித்த விரிவான நம் பார்வையை இங்கு பதிவிட வேண்டியுள்ளது.

தொடக்கத்திலேயே ஒன்றை ஒளிவு மறைவின்றிக் குறிப்பிட்டு விடுகின்றேன். நேற்று சட்டமன்றத்தில் தி.மு.க உறுப்பினர்கள் சிலர் நடந்துகொண்ட விதம் விரும்பத்தக்கதாக இல்லை. அவைத்தலைவரிடம் நடந்துகொண்ட முறையும், அவர் இருக்கையில் உறுப்பினர்கள் இருவர் அமர்ந்ததும் நம் கழகத்தின் கண்ணியத்திற்கு ஏற்றதில்லை. நாட்டு மக்களிடையே தி.மு.க. அண்மைக்காலமாகப் பெற்றுவந்த மிகப் பெரும் நற்பெயருக்கு ஊறு விளைவிப்பதாகவே அவை அமைந்து விட்டன. குறிப்பாக, செயல்தலைவர் தளபதி அவர்களின் மிக நாகரிகமான நடவடிக்கைகளும், கண்ணியமான அறிக்கைகளும் அவருடைய புகழையும், அதன் வழிக் கழகத்தின் பெயரையும் பேரளவில் உயர்த்தின. அதனைத் தொடர்ந்து கட்டிக் காத்துக் காப்பாற்றி, வளர்த்தெடுத்திட வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

அவைத் துணைத் தலைவர் இருக்கையில் ஒருமுறை சசிகலா அமர்த்தப்படவில்லையா என்றும், அ.தி.மு.க.வினர் இதுபோன்ற கலவரச் செயல்களில் பலமுறை ஈடுபட்டதில்லையா என்றும் நண்பர்கள் கேட்கின்றனர். கண்டிப்பாக அவை உண்மைதான். எனினும், ஒரு தவறு இன்னொரு தவறை ஒருநாளும் நியாயப்படுத்தாது. அடுத்து, அவர்களின் தரத்திற்கு நாம் என்றும் இறங்கிப் போய்விடவும் கூடாது.

இக்கருத்துதான் தளபதிக்கும் ஏற்பட்டிருக்கக்கூடும். அதனால்தான் உடனடியாக அவைத்தலைவர் அறைக்குச் சென்று வருத்தம் தெரிவித்துள்ளார். "தெரிந்தோ தெரியாமலோ, தவறுகள் நடந்திருந்தால்,அதற்கு நாங்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டு, அதற்காகத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மன்னிப்புக் கேட்பதாக" தளபதி அவைத்தலைவரிடம் கூறியது, முரசொலி (19.02.2017 பக்.12) நாளேட்டில் இடம்பெற்றுள்ளது. இது அவருடைய பெருந்தன்மையையும், நாகரிகத்தையும் காட்டுகின்றது.

ஆனால் இது குறித்து மட்டுமே பெரிதாகப் பேசும் சில ஊடகங்கள், மற்ற செய்திகள் குறித்து வாய் திறக்காமல் இருப்பது என்ன நியாயம்? நேற்று நடந்த அனைத்து நிகழ்வுகளையும் விரிவாகப் பார்த்தால்தான் உண்மை விளங்கும்!

(1) சட்டமன்றம் தொடங்கிய பிறகுதான் சிக்கல்கள் தொடங்கின என்று கருதுவது உண்மையன்று. அதற்கு முன்பே ஆளும் கட்சி தேவையற்ற செயல்களைத் தொடங்கி விட்டது. சட்டமன்றம் வந்த எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட அனைவரையும், போர் நினைவுச் சின்னம் அருகிலேயே நிறுத்தி அனைத்து மகிழுந்துகளையும் சோதனையிட்டுள்ளனர். அது மட்டுமின்றி, அங்கிருந்தே நடந்துதான் போக வேண்டும் என்றும் கூறியுள்ளனர். இதனை அனைவரும் கண்டிக்க வேண்டாமா?

ஒருவேளை, பாதுகாப்புக் காரணம் கருதி அவ்வாறு செய்யப்பட்டது என்றால், அந்த விதி அனைவருக்கும் பொருந்த வேண்டாமா? ஆளும் கட்சியினரின் ஊர்திகள் மட்டும் உள்ளே அனுமதிக்கப் பட்டனவே, அது எப்படி? அதுவும் அந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள், தொடக்கப்பள்ளி மாணவர்களைச் சுற்றுலா அழைத்துக் கொண்டு போவதைப் போலல்லவா அழைத்து வரப்பட்டனர். இப்படி ஆளுக்கு ஒரு விதி என்றால் யாருக்குத்தான் கோபம் வராது?

(2) மூடிய அவைக்குள் வாக்கெடுப்புக்கான கூட்டம் தொடங்கியது. ஊடகவியலாளர்கள், பார்வையாளர்கள் யாருக்கும் அனுமதியில்லை. அப்படியானால், உடனடியாகக் காணொளிப் படங்களைத் தொலைக்காட்சிக்காக யார் எடுத்தார்கள்? ஜெயா தொலைக்காட்சிதான்! அவர்களுக்கு மட்டும் எப்படிச் சிறப்பு அனுமதி? அவர்கள் எடுத்துத் தொகுத்த படம்தான் edited version) அனைத்துத் தொலைக்காட்சிகளிலும் ஓடியது. ஓரிரு தொலைக்காட்சிகள் தவிர ஏனையோர், "நன்றி ஜெயா தொலைக்காட்சி" என்று கூடப் போடவில்லை. அவர்களிடமிருந்து வந்த படம் என்பதை வெளியிட்டால்தானே, அது ஒருபக்கச் சார்புடையது என்பது மக்களுக்கு விளங்கும்!

(3) ரகசிய வாக்கெடுப்பு கோருவது எதிர்க்கட்சிகளின் உரிமை. இதுவரையில் அப்படி ரகசிய வாக்கெடுப்பு நடைபெறவில்லை என்பது சரியே. ஆனாலும், அசாதாரண நிலையில் அதற்கு அவைத்தலைவர் அனுமதி அளிக்கலாம். அந்த உரிமை அவருக்கு உள்ளது. அதனைத்தான் எதிர்க்கட்சியினர் கோரினர். அதனை ஏற்க மறுத்து, எதிர்க்கட்சியினர் எல்லோரையும் வெளியேற்றிவிட்டு, வாக்கெடுப்பு நடத்தியது ஜனநாயகம் அன்று. ஆளும் கட்சியினர் மட்டும் வாக்களிப்பதற்குச் சட்டமன்றம் எதற்கு? கூவத்தூர் விடுதியே போது மல்லவா?

(4) தான் தாழ்த்தப்பட்டவர் என்பதால்தான் தி.மு.க. அப்படி நடந்து கொண்டது என்று அவைத்தலைவர் தனபால் சொல்வது முற்றிலும் உண்மைக்கு மாறான ஒன்று. சமூக நீதிக் கொள்கையில் எப்போதும் உறுதியாக இருக்கும் கட்சி தி.மு.க. என்பது அனைவரும் அறிந்த ஒன்று. மேலும் இந்தக் குற்றச்ச்சாற்றை அவைத்தலைவர் இரண்டாவது முறையாகக் கூறுகின்றார் என்பதை நாம் நினைவு படுத்திக் கொள்ள வேண்டும்.

அ.தி.மு.க.வின் சார்பில் அவர் வேட்பாளராகத் தேர்தலில் போட்டியிட்ட நேரத்தில், அவர் கட்சிக்காரர்கள் மீதே அவர் முதல் முறை அந்தக் குற்றச்ச்சாற்றை முன்வைத்தார். ."இவர் எங்களைக் கவனிப்பதே இல்லை. வேலை செய்யும் எங்களுக்கு உணவு கூடக் கொடுப்பதில்லை" என்று ஜெயலலிதாவிடம் அன்று அ.தி.மு.க.வினர் குறை கூறினர். உடனே அவர் தனபால் அவர்களை அழைத்து விசாரித்தார். அதற்கு அவர் சொன்ன விடை, "அம்மா, நான் தாழ்த்தப்பட்டவன் என்பதால், என் வீட்டில் உணவு உண்ண இவர்கள் தயங்குகின்றனர். என்னைத் தாழ்வாகப் பார்க்கின்றனர்" என்பதுதான். எனவே சாதியை ஓர் ஆயுதமாக இவர் பயன்படுத்துவது தெரிகிறது.

அருந்ததியர் சமூக மக்களுக்கு, சில எதிர்ப்புகளையும் மீறி, உள் ஒதுக்கீடு கொடுத்தது தி.மு.க. ஆட்சிதான். அத்தகைய கட்சியை இவர் குறை சொல்வதை அரசியல் பார்வை உடையவர்கள் நம்ப மாட்டார்கள்.

(5) தங்கள் உறுப்பினர்கள் சிலரின் செயல்களுக்காகத் தளபதி ஸ்டாலின் வருத்தம் தெரிவித்தார். ஆனால் இப்போது வரையில், தி.மு.க. உறுப்பினர்களிடம், சட்டமன்றத்தில் சட்டத்திற்குப் புறம்பாகவும், வன்முறையாகவும் நடந்து கொண்டதற்கு ஆளும் கட்சியிடமிருந்து ஒரு வருத்தமும் வெளிப்படவில்லை.

இத்தனை உண்மைகளையும் மறைத்துவிட்டு, தி.மு.க. மீது மட்டும் பழிபோடுவது உள்நோக்கம் உடையதாகத்தானே இருக்க முடியும்?. ●

## ஓ.பி.எஸ் - தீபா

# ஒரு பேராபத்து







பொள்ளாச்சி **மா.உமாபதி**

வரலாறு ஒரே திசையில் செல்லாது. அவ்வப்போது திருப்பங்களைச் சந்தித்துக் கொண்டே இருக்கும். அது இயல்பானது தான் என்றாலும், இப்போது வரலாறு விசித்திரமான காட்சிகளைத் தமிழ்நாட்டில் கண்டு வருகிறது. ஒரு கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர் இயற்கை எய்துகின்ற நேரத்தில், அவரின் அடியொற்றிக் கொள்கைவழி நடக்கும் இரண்டாம் கட்டத் தலைவர்களிடையே போட்டி நடைபெற்றால் அதில் வலிமை வாழும். பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவுற்றபோது அவரது அன்புத் தம்பிகள், கலைஞருக்கும், நாவலருக்குமிடையே போட்டி ஏற்பட்டது. பெருமளவில் கழகத்தவரின் ஆதரவு பெற்று இருந்த கலைஞர் வெற்றி பெற்றார். நாவலரை, தந்தை பெரியாரும், மக்கள் திலகம் எம்.ஜி.ஆரும் தேற்றினர். தலைவர் கலைஞர் ஆயிரம் சோதனை சூறாவளிகளையும், சுனாமிகளையும் எதிர்கொண்டு வென்று இன்றளவும் கழகத்தை இமயமெனக் காத்து நிறுத்தி வைத்துள்ளார். நாவலரோ மக்கள் தி.மு.க. எனத் தனிக்கட்சி தொடங்கி அதை அதிமுகவுடன் இணைத்து தன் இயலாமையை வெளிப்படுத்தினார்.

அதுபோலவே, முதல்வராக இருந்த நிலையில் எம்.ஜி.ஆர். காலமானார். அப்போது அவருடைய இடத்துக்கு அவரது கொள்கை வழித் தொண்டர்கள் அல்லது தலைவர்கள் யாரும் போட்டியிடவில்லை. 1969இல் கலைஞரோடு போட்டியிட்ட நாவலர் கூட 1987இல் எம்.ஜி.ஆரின் இடத்துக்குப் போட்டியிட முடியாமல் ஓரங்கட்டப்பட்டார். எம்.ஜி.ஆரின் துணைவியார் ஜானகி அம்மையாரும் ஜெயலலிதாவும் முன்னிறுத்தப்பட்டு முடிவில் ஜெயலலிதா அந்த இடத்தைப் பிடித்தார்.

இப்போது ஜெயலலிதா மறைந்து விட்டார். அவரது இடத்துக்கு போட்டியிடுபவர்கள் அவரது கொள்கை (?) வழித் தலைவர்களா என்றால் ஆம்! தமிழ்நாட்டைச் சுரண்டுவதும், கொள்ளையடிப்பதும் சொத்து சேர்ப்பதும் தானே ஜெயலலிதாவின் கொள்கையாக இருந்தது.

அவரது வழியில் அவரைப் போலவே தமிழ்நாட்டை சுரண்ட, கொள்ளையடிக்க ஒரு அதிகாரப் போட்டி நடைபெற்று வருகிறது. ஜெயலலிதா "ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டு" சிறை செல்லும் போதெல்லாம் முதல்வராக ஜெயலலிதாவால் அடையாளம் காணப்பட்டவர் என்ற தகுதியோடு (?) ஓ.பன்னீர் செல்வம் அவர்களும், ஜெயலலிதாவோடு 33 ஆண்டுகாலம் தோன்றாத் துணையாக தோழியாக இருந்தவர் என்ற தகுதியோடு சசிகலா அவர்களும் போட்டியிட்டனர்.

வி.கே. சசிகலா என்ற பெயரே அதிமுகவின் தொண்டர்கள் மத்தியிலும், வெகு மக்களின் பொதுப்புத்தியிலும் வேப்பங்காயாகக் கசந்தது. அம்மையார் ஜெயலலிதாவின் மரணத்திற்கே சசிகலாவின் குடும்பம் தான் காரணம் என்பது வெகுமக்கள் கருத்து. எனவே ஜெயலலிதாவுக்குப் பின் சசிகலா அவரது இடத்துக்கு வரக்கூடாது என்று கருதிய அதிமுக தொண்டர்கள், எந்தவித அரசியல் அனுபவமும் இல்லாத, ஜெயலலிதாவின் "இரத்த உறவு" என்ற ஒரே தகுதியின் அடிப்படையிலும், "ஜெயலலிதா மாதிரியே இருக்கிறார்" என்பதாலும் "தீபாவைத் தலைமை யேற்றிட அவரது வீடு தேடிச் சென்று கோரிக்கை வைத்தார்கள். ஓ.பன்னீர் செல்வம் சசிகலாவின் அடிமையாகச் செயல்படுகிறார் என்று மக்கள் கருதிய போது தீபாவுக்கான ஆதரவு பெருகிறது.

ஜெயலலிதா மரணம் அடைந்ததில் வெகு மக்களுக்குப் பல்வேறு சந்தேகங்கள். ஜெயலலிதா சாதாரண காய்ச்சல் மற்றும் நீர்சத்துக் குறைபாட்டுக்காகத் தானே அப்போலோவில் அனுமதிக்கப்பட்டார். ஒவ்வொரு நாளும் அவர் குணமடைந்து வருவதாகத் தானே அ.தி.மு.க. பிரமுகர்களும், கூறுகின்றனர்; மருத்துவ அறிக்கைகளும் கூறின. ஆனால் அவர் இறந்து விட்டார் என்று பல நாள்களுக்கு முன்பாகவே "வதந்தியாக" சொல்லப்பட்டவை தானே முடிவில் உண்மையானது. சிகிச்சையில் இருக்கும் ஜெயலலிதாவின் படங்கள் எவையும் இன்று வரை வெளியிடப்படவில்லையே ஏன்? அவரைக் காணவந்த ராகுல்காந்தி, தமிழக ஆளுநர், மத்திய அமைச்சர் உள்ளிட்ட அனைத்துக் கட்சித் தலைவர்களும், சசிகலாவும், மருத்துவர் குழுவும் சொன்னதைக் கேட்டுவிட்டுத் திரும்பினார்களே தவிர சிகிச்சை பெற்று வந்த முதலமைச்சரைக் கண்ணால் கண்டவர்கள் யாருமே இல்லை என்பது பெரும் மர்மமாக இருக்கிறது.

முதலமைச்சர் நீண்ட சிகிச்சையில் இருப்பதால் அவரது ஒப்புதலோடு

பொறுப்பு முதல்வராக ஓ.பன்னீர் செல்வம் நியமிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். உண்மையில் ஜெயலலிதா ஒப்புதலோடு தான் ஓபிஎஸ் நியமிக்கப்பட்டாரா என்கின்ற சந்தேகம் மக்களுக்கு இருக்கிறது.

தஞ்சாவூர் அரவக்குறிச்சி இடைத்தேர்தல் அதிமுக வேட்பாளர்களுக்கு இரட்டை இலைச் சின்னம் ஒதுக்க கையெழுத்திட வேண்டிய இடத்தில் ஜெயலலிதாவின் இடது கைப் பெருவிரல் ரேகையை வைத்தார். சர்ச் பார்க் கான்வென்டில் படித்தவரை கைநாட்டுப் பேர்வழி ஆக்கிவிட்டார்கள். முந்தைய நாள்களில் அவர் குணமடைந்து விட்டார். வேண்டியதைக் கேட்டு விரும்பி சாப்பிட்டார் செவிலியரோடு பந்து விளையாடினார். அவர்களை வீட்டுக்கு அழைத்தார் என்றெல்லாம் சொன்னவர்கள், இப்போது "கைநாட்டு" வாங்கியது மர்மமாக இருக்கிறதே என்பது மக்களின் சந்தேகம். கைநாட்டு வாங்கிய போது அவர் (சுய) "உணர்வோடு" இருந்தாரா? என்பதும் மக்கள் சந்தேகம்.

இந்த கபட நாடகங்களுக்கெல்லாம், மத்திய மோடி அரசு உறுதுணையாக இருந்தது. அதனால் தான் எய்ம்ஸ் மருத்துவர் குழுவும் அப்போலோ மருத்துவர் குழுவோடு ஒத்துழைத்தது. இதற்குச் சீமையிலிருந்து வந்த டாக்டர் பீலேவும் உடந்தை. அவர் வரவழைக்கப்பட்டதே உயிரற்ற உடலை பலநாள் கெடாமல் பாதுகாக்கத் தானே தவிர சிகிச்சை அளிக்க அல்ல என்று வெகுமக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

இந்த நிலையில் பொறுப்பு முதல்வராக எடப்பாடி பழனிச்சாமியைக் கொண்டு வரத்தான் சசிகலா விரும்பி இருக்கிறார். ஆனால் இவரைப் போலவொரு கொத்தடிமை நமது கட்டசியிலே கூட கிடைக்க மாட்டார் என்பதால்தான் மோடி ஓ.பன்னீர்செல்வத்தை தேர்வு செய்தார். அப்போலோ தகிடுதித்தங்கள் தொடர்ந்து கொண்டு இருந்தாலும், அதற்கு மத்திய அரசின் ஒத்துழைப்பு தேவைப்பட்டதாலும், சொத்துக் குவிப்பு வழக்கின் தீர்ப்பு வர இருப்பதாலும் அன்றைய நிலையின் சசிகலா மோடியின் விருப்பத்தை நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழியின்றி ஒத்துக் கொண்டார். ஓ.பி.எஸ் முழுக்க முழுக்க மோடியின் தேர்வு பொறுப்பு முதல்வரே. ஜெயலலிதா மரணத்தின்பின் முதல்வராகத் தேர்வு செய்யப்பட்டார். இந்த நிகழ்வுகளைக் கண்காணிக்கத் தான் ஜெயலலிதாவின் மரணத்திற்கு அஞ்சலி செலுத்திய பின் டெல்லி திரும்ப வேண்டிய வெங்கையா நாயுடு ராஜாஜி ஹால் புளிய மரத்தடியில் காத்துக் கிடந்தார். இழவுக்கு வந்தவர் பந்தலில் தொங்கும் பாகற்காயின் மீது கண் வைத்தது போல் பாஜக தமிழகத்தைப் பார்த்தது.

முதல்வர் பதவியைத் தற்காலிகமாக இழந்த சசிகலா திட்டமிட்டுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியைக் கைப்பற்றினார். கட்சி சகிகலாவிடம்; ஆட்சி ஓபிஎஸ் இடம் என்று முதலில் போக்குக் காட்டிவிட்டு ஆட்சியும் கட்சியும் ஒரே தலைமையிடம் இருக்க வேண்டும் என்ற காரணத்தைச் சொல்லி முதல்வர் பதவியையும் கைப்பற்ற சசிகலா காய் நகர்த்தினார். அதற்கு அவர் தேர்வு செய்த காலகட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது, மோடியும், பாஜகவும் பஞ்சாப் உள்ளிட்ட வடமாநிலத் தேர்தலில் மும்முரமாக இருந்த காலகட்டத்தில், தமிழ்நாட்டை விட அவர்களுக்கு உ.பியும், பஞ்சாப்பும் முக்கியமாக இருக்கும் என்று கருதி, சசிகலா முதல்வர் பதவியைக் கைப்பற்ற நினைத்தார். அதற்கென சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டி ஓபிஎஸ்சின் விலகல் கடிதத்தைப் பெற்று, சசிகலாவை முதல்வர் பொறுப்புக்கு தேர்வு செய்தனர். அப்போது தனக்கென எந்தக் கருத்தும் இல்லாமல், எஜமானர்கள் சொற்படி நடக்கும் ஓபிஎஸ் எஜமானர்கள், வடமாநில தேர்தல் களத்தில் தீவிரமாக இருந்த காரணத்தாலும், எஜமானர்களின் ஆலோசனையைப் பெறமுடியாததாலும், சசிகலா நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போட்டு விலகல் கடிதத்தைக் கொடுத்தோடு, சசிகலாவை முதல்வர் பொறுப்புக்கு முன்மொழியவும் செய்தார்.

அதன்பின், பாஜக.வினர்; தமிழ்நாட்டின் மாற்றங்களை அறிந்து உரிய ஆலோசனை வழங்கிய பின்னால் ஓ.பன்னீர் செல்வம்



பிப்.7ம் நாள் இரவு 9 மணிக்கு திடீரென வீறு கொண்டு எழுந்து ஜெயலலிதாவின் கல்லறையில் "தியானப் புரட்சி" நடத்தினார். எஜமானர்களின் ஆலோசனைப்படி செய்தியாளர்களுக்குப் பேட்டியும் கொடுத்தார். வெறுமனே அவர் விருப்பப்பட்டு ஜெயலலிதா கல்லறையில் தியானம் செய்யச் சென்றிருந்தால் அது கவனிப்பாரற்றுப் போயிருக்கும். ஆனால் அதை ஊடக வெளிச்சம் போட்டுக் காட்டும் பொறுப்பினை பாஜக எடுத்துக் கொண்டது. ஓ.பன்னீர் செல்வம் இப்படி கல்லறைத் தியானம் செய்ய போகிறார் என்கின்ற தகவலை பாஜக வட்டாரங்கள் செய்தியாளர்களுக்கு சொன்னதால்தான் பன்னீர் செல்வத்திற்கு முன்பே சில ஊடக செய்தியாளர்கள் மெரினாவுக்கு வந்து விட்டனர். எனவே கல்லறை தியானம் பாஜகவால் திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்பட்ட நாடகம். இப்படிப்பட்ட "தியானம்" எல்லாம் பாஜக பாணி. "திராவிட அரசியல்" அல்ல. அடுத்தடுத்த நிகழ்வுகளைப் பார்ப்போம்.

ஓ.பன்னீர் செல்வம் வாய் மலர்ந்ததும் முன்னதாகச் சென்று ஆதரவு அளித்தவர். முன்னாள் பா.ஜ.க. இன்னாள் அதிமுக எம்.பி. மைத்திரேயன்.

அடுத்து ஆதரவு தெரிவித்தவர் நாடறிந்த பாஜக நடிகர் எஸ்.வி.சேகர்.

அடுத்து ஆதரவுக் கரம் நீட்டியவர் முன்னாள் RSS இந்நாள் அதிமுக அமைச்சர் மாபா பாண்டியராசன். அடுத்து நள்ளிரவென்றும் பாராமல் இரவு 1 மணிக்குத் தொலைக்காட்சியில் ஆதரவு தெரிவித்தவர் எச்.ராஜா.

இப்படியாகத் தொடர்ந்து ஆதரவில் கடைசியாக ஆதரவு தெரிவித்தவர் மயிலை சட்டமன்ற உறுப்பினர் நடராஜ் அய்யர்.

ஆக பன்னீர் செல்வம் வெறும் பொம்மைதான். அவரை முழுக்க முழுக்க ஆட்டிப் படைப்பவர்கள் RSS பாஜக சக்திகள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். பன்னீர் செல்வம் சசிகலாவின் அடிமையாகச் செயல்பட்ட வரையில் தீபா முன்னிறுத்தப்பட்டார். ஆனால் பன்னீர் செல்வம் முழுமையாகக் களமிறங்கப்பட்டவுடன் தற்செயலாக தீபாவும் கல்லறைக்குச் சென்று பன்னீர் அணியில் இணைகிறார். இதுவும் எஜமானர்கள் சொற்படியும் விருப்பப்படியும் தான் (இப்போது அதிலும் ஒரு மாற்றம் நடந்துள்ளது).

பன்னீர் செல்வம் ஜெயலலிதாவின் பழைய அடிமை என்றாலும் இன்று பா.ஜ.க. வின் கைப்பாவை. அதனால் தான் ஜெயலலிதா நிராகரித்த FSR உதய் திட்டம் போன்றவற்றிற்கு ஒப்புதல் வழங்கினார்.

டில்லியில் தன்னை சந்திக்க நேரம் கேட்ட 50 அதிமுக எம்பிகளுக்கு நேரம் வழஙகாத பிரதமர் மோடி ஓபிஎஸ் ஐ மட்டும் சந்தித்தார்.

ஆண்டுக் கணக்கில் கிடப்பில் போட்டிருந்த ஜல்லிக்கட்டுப் பிரச்சினையை தீர்க்காமல் ஓபிஎஸ்ஸால் தமிழ்நாடு திரும்ப முடியாது என்ற நிலை ஏற்பட்டதும், ஒரே நாளில் அவசரச் சட்டம் குடியரசுத் தலைவர் ஒப்புதல் என்று தீர்வு கண்டனர்.

தீபா, பன்னீர் செல்வம் இருவரும் இரு கரங்களாக செலய்படுவோம் என்று தீபா அறிவித்தார். நாங்கள் இருவரும் பாஜகவின் இரு கரங்களாகச் செயல்படுவோம் என்பது தான் பொருள். அப்போதே அதிமுகவின் இரட்டை இலை முடக்கப்பட்டு இரு கரங்களையோ மெழுகு வர்த்திகளையோ சின்னமாக்கச் சதிவலை பின்னப்பட்டு விட்டது.

தீபா, பன்னீர் செல்வத்தின் கீழ் செயல்படுவதா என்ற கேள்வி எழும்போது பன்னீர் செல்வத்தின் கீழ் அல்ல பன்னீர் செல்வத்துக்கு துணையாகவும், இணையாகவும் செயல்படுவார். அதுவும் தீபா ஒரு பயிற்சியாளராக சிறிது காலம் செயல்படுவார். உண்மையான தமிழக அரசியலைப் புரிந்து கொள்ள சிறிது கால அவகாசம் தீபாவுக்குத் தேவைப்படுகிறது. அப்பயிற்சியைப் பன்னீர் செல்வத்திற்கு துணையாக இருந்து பெறுவார். பயிற்சி முடிந்ததும் முழுப்பொறுப்பேற்க முன்னிறுத்தப்படுவார் என்பதே களநிலவரம்.

முன்பு ராஜாஜிக்குப் பிறகு ஜெயலலிதா, இப்போது ஜெயலலிதாவுக்குப்பிறகு தீபா. எப்படியாவது தமிழகத் தலைமையிடம் அக்கிரகாரமாகத் தான் இருக்க வேண்டும் என்பது பாஜக ஆர்.எஸ்.எஸ்.ஸின் திட்டம்.

எந்தக்காலத்திலும், பாஜக நேரடியாக தமிழக அரசியலில் வேர் பிடிக்க முடியாது என்பது உண்மை. திமுக அதிமுக வோடு கூட்டணி அமைத்து சில நாடாளுமன்ற தொகுதிகளில் வென்றாலும், அடுத்து வந்த தேர்தல்களில் படுதோல்வியைத் தான் பாஜக பெற்றது. தன்னால் நேரடியாக இயலாத ஒன்றைத் தனது ஏஜெண்டுகள் மூலம் சாதித்துக் கொள்ளவே பாஜக பன்னீர் செல்வத்தையும் தீபாவையும் முன்னிறுத்துகிறது.

பன்னீர் தீபா ஒரு பேராபத்து.

தமிழர்களே விழித்துக் கொள்ளுங்கள். ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

அச்சில் உதவி
**அ.சாதிக் பாட்சா**
**ஜெம் கிராபிக்ஸ்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

**தி.மு.கழக உறுப்பினர்களை வலிந்து பேரவையிலிருந்து வெளியேற்றி, சட்டமன்றத்தில் எதிர்கட்சி இல்லாமல் நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேற்றிய பேரவைத் தலைவரின் செயலைக் கண்டித்து, 22.02.2017 அன்று தி.மு.கழகத்தால் நடத்தப்பெற்ற பட்டினிப்போராட்டத்தில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை...**

### ▼ மண்ணடி, சென்னை





### ▼ திண்டுக்கல்



### ▼ திருப்பூர்



*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## வராத பிரதமர் வந்தார்

மத வெறிக் கூட்டத்தைச் சேர்ந்த ஆர்.எஸ்.எஸ். நரேந்திர மோடிக்கு நடிக்கத் தெரியும், உண்மைக்கு மாறாகப் பேசத் தெரியும், 10 கோடி ரூபாய்க்குக் 'கோட்' போடத் தெரியும்.

மக்கள் நலனைப் பற்றி மட்டும் அவருக்குச் சிந்திக்கத் தெரியாது.

இந்தியப் பிரதமர்களில், மோடியைப் போல உலக நாடுகளின் இண்டு இடுக்குகளில் எல்லாம் மக்கள் பணத்தில் சுற்றித் திரிந்தவர் யாருமில்லை.

அவர் எங்கு போனாலும் இந்து மத வெறி அவருடன் போகும்.

தமிழர்கள் என்றாலும், தமிழகம் என்றாலும் எட்டிக்காயாக கசக்கும் மோடிக்கு. தமிழகத்தில் மத வெறியை தூண்டவேண்டும் என்றால் மட்டும் இனிக்கும்.

கோவையை அடுத்த வெள்ளிங்கிரி மலைப்பகுதி ஓர் இயற்கை வனப்பகுதி. விலங்குகள், குறிப்பாக யானைகள் நடமாடும் வழித்தடங்கள் இங்கு இருக்கின்றன.

இப்படிப்பட்ட இயற்கைச் சூழ்நிலையில் பல இலட்சம் ஏக்கர்களை வளைத்து, காடுகளை அழித்து, முறையான அனுமதி கூட இல்லாமல் ஈசா யோக மையம் என்ற ஒரு மதவாத நிறுவனத்தைக் கட்டியிருக்கிறார். ஜக்கி வாசுதேவ் என்பவர்.

இதற்கு அந்த பகுதி மக்களிடம் இருந்து கடும் எதிர்ப்புகள் வலுத்துக்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் இங்கே 112 அடி உயரத்திற்கு ஆதியோகி சிவன் முகச்சிலை என்று ஒரு கற்சிலையைக் கட்டியிருக்கிறார்கள்.

அச்சிலையால் நாட்டுக்கோ, மக்களுக்கோ பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை. மாறாக மதவாதச் சிந்தனைதான் தலை தூக்கும். அப்படிப்பட்ட சிலையைத் திறக்க இந்தியப் பிரதமர் மோடி வருகிறார்.

தமிழ்நாட்டில் வர்தா புயல், மழையால் வட தமிழகம் ஏறத்தாழ அழிவு நிலைக்கே சென்று, மக்கள் வாழ்க்கை சின்னாபின்னமானது.

அதைப் பார்க்கத் தமிழகம் வராத பிரதமர்...

சென்னை மெரினா கடற்கரையில், சல்லிகட்டுக்கு ஆதரவு என 10 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் திரண்டு, பிற மாவட்டங்களிலும் மக்கள் வீதிக்கு வந்தபோது, தமிழகம் நிலைகுலைந்து போனது.

அப்போது தமிழகம் வராத பிரதமர்...

கர்நாடகம், கேரளம் இருமாவட்டங்களின் தடுப்பால் நீர்வரத்து இன்றி கழனிகள் எல்லாம் பாலையாகி, விவசாயிகள் மரணம் அடைந்துக்கொண்டு இருந்தார்கள்.

அப்போது தமிழகத்தைத் திரும்பிப் பார்க்காத மோடி...

மதவாத ஈஷா மைய சிலை திறப்பதற்கு மட்டும் தனி விமானத்தில் வந்து சென்று இருக்கிறார்.

இப்படி ஒரு பிரதமர் நாட்டிற்கு தேவையா?

எஞ்சி இருக்கும் ஆட்சிக் காலத்தில் இன்னும் என்னென்ன செய்யப் போகிறார்களோ, நமக்குத் தெரியவில்லை.

ஒரு வேளை அந்த கற்சிலைக்குத் தெரிந்திருக்குமோ என்னவோ!

## வேண்டுகோள்

'கருஞ்சட்டைத் தமிழர்' இதழுக்கு ஆண்டுக் கட்டணம், வாழ்நாள் கட்டணம் செலுத்தி இதழ் வரப்பெறாதவர்கள் தயவு செய்து அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டுகிறோம். தொடர்பு எண்: 044-420 471 62.

- பொறுப்பாசிரியர்

## மறக்க முடியுமா?

# பெருமழைப்புலவர் பொ.வே.சோமசுந்தரனார்

### எழில்.இளங்கோவன்

சங்க இலக்கியங்களைப் பெருமளவு பதிப்பித்து வெளியிட்ட பெருமை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தைச் சேரும்.

இக்கழகத்தின் ஆட்சியாளராக இருந்த வ.சுப்பையாபிள்ளை அவர்கள் தேர்ந்த உரையாசிரியர்களைக் கொண்டு சங்க இலக்கியங்களுக்கு உரை எழுதவும், வரலாற்று ஆய்வாளர்களைக் கொண்டு வரலாறு மற்றும் ஆய்வு நூல்களையும் எழுதவும் பெரும் காரணமாக இருந்தவர்.

இவரால் மிகச் சிறந்த உரையாசிரியர்களாகத் தமிழ் உலகுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட பெரும் புலவர்களுள் 'பெருமழை' பெ.வே.சோமசுந்தரரும் ஒருவர்.

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், மேலப்பெருமழை என்ற ஊர்தான் சோமசுந்தரனாரின் சொந்த ஊர்.

தாயார் : சிவகாமி அம்மாள்.

தந்தை : வேலுத்தேவர்.

பிறந்த ஆண்டு : 05.09.1909.

மறைந்த ஆண்டு : 03.01.1972

இவரின் கல்வி திண்ணைப்பள்ளியிலிருந்து தொடங்கியது.

திண்ணைப்பள்ளியில் ஆத்திசூடி, அரிச்சுவடி, வெற்றி வேட்கை, நிகண்டு நூல்கள், நைடதம், அருணாசலப் புராணம் போன்ற நூல்களைத் தெளிவுறப் படித்துத் தேர்ந்தார்.

இவரின் தந்தையார் வேளாண்மைத் தொழில் செய்து வந்தார்.

தன் மகனின் கல்வியில் இவருக்கு நாட்டம் இல்லை. எனவே தன் மகன் சோமசுந்தரனாரை இவர் உழவுத் தொழிலில் ஈடுபடுத்தினார்.

ஆனால் நம் சோமசுந்தரனாருக்கு கல்வியின் மேல் பெரு நாட்டம் இருந்தது.

தந்தை சொல் மீறாமல் பகலில் உழவுத் தொழில் செய்தார். இரவில் தந்தைக்குத் தெரியாமல் நூல்களைத் தேடிப் படிக்கத் தொடங்கினார்.

இவரின் 10ஆம் வயதில் தாயார் மரணம் அடைந்தார். தந்தை மறுமணம் செய்து கொண்டார்.

வேண்டிய பாசமும், போதிய பராமரிப்பும் இல்லாத நிலையில், இவர் தன் தாய் மாமன் வீட்டிற்குச் சென்று அங்கு வளர்ந்தார்.

இந்நிலையில் மாமன் வீட்டிற்கு அருகில் சர்க்கரைப் புலவரைச் சந்தித்த சோமசுந்தரனார், அவரிடம் தன் கல்வி வேட்கையையும், தான் படிக்க விரும்புவதையும் சொல்லியிருக்கிறார்.

சர்க்கரைப் புலவரோ, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பூவராகம் பிள்ளை அவர்களுக்கு ஒரு பரிந்துரை மடல் எழுதி சோமசுந்தரனாரை அனுப்பி வைத்தார்.

சிதம்பரம் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த சோமசுந்தரனார், அங்கு கல்வி பயிற்றுவித்துக் கொண்டிருந்த அறிஞர் பெருமக்களான பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், சோமசுந்தர பாரதியார், விபுலானந்த அடிகளார் ஆகியோரிடம் கல்வி பயின்றார்.

அப்பல்கலைக் கழகத்தில் புலவர் தேர்வில் முதல் மாணவராக இவர் தேர்ச்சி பெற்றார்.

ஆனாலும் எர்ஸ்கின் பிரபு என்ற ஆங்கிலேய ஆளுநர் ஏனோ தெரியவில்லை, இவரின் மீது இருந்த கோபத்தால் இவரின் தேர்ச்சிச் சான்றிதழைக் கிழித்து எறிந்து விட்டார்.

நொந்து போன சோமசுந்தரனார் தன் ஊரான பெருமழைக்குத் திரும்பி மீண்டும் உழவுத் தொழிலைச் செய்யத் தொடங்கினார்.

இந்நிலையில், ஆற்றா மனநிலையில் ஒரு முறை தன் ஆசிரியரான பண்டிதமணி கதிரேசஞ் செட்டியாரை இவர் போய் பார்த்து இருக்கிறார்.

தன் மாணவனின் அறிவாற்றலை நன்கு அறிந்திருந்த பண்டிதமணி அவர்கள், தான் உரை எழுத வேண்டும் என்று நினைத்திருந்த திருவாசகத்தை சோமசுந்தரனாரிடம் கொடுத்து அதற்கு உரை எழுதப் பணித்தார்.

சோமசுந்தரனார் எழுதிய முதல் உரை இதுதான். திருவாசக உரை மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.

அப்போது சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் புலவர் கருப்பக்கிளார் இராமசாமி அவர்கள் இலக்கிய நூல்களுக்கு உரை எழுதிக்கொண்டு இருந்தார்.

திருவாசக உரையின் தாக்கம், சோமசுந்தரனாரை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஈர்த்துக் கொண்டது.

அங்கே –

நற்றிணை – குறுந்தொகை – அகநானூறு – புறநானூறு – கலித்தொகை – ஐங்குறுநூறு – சிலப்பதிகாரம் – மணிமேகலை – வளையாபதி – குண்டலகேசி – சீவகசிந்தாமணி – நீலகேசி – பெருங்கதை – புறப்பொருள் வெண்பாமாலை – பரிபாடல் – கல்லாடம் – ஐந்திணை ஐம்பது – ஐந்திணை எழுபது – பட்டினத்தார் – திருக்கோவையார் ஆகிய 21 நூல்களுக்கு உரை எழுதினார்.

சங்க இலக்கியங்களுக்கு இவரின் உரையில் திணைகள், துறைகள் குறித்த விளக்கம், பழைய உரைக் குறிப்புகள், அதற்கான விளக்கம், தெளிவான சொற்பொருள், இலக்கணக் குறிப்புகள் செம்மையாக இருக்கும்.

இவர் மிகச் சிறந்த நாடக நூலாசிரியர். 'செங்கோல்', 'மானனீகை' ஆகிய இரண்டு மிகச் சிறந்த நாடக நூல்களை எழுதியிருக்கிறார்.

பண்டிதமணியின் வரலாற்றை, வரலாற்று நூலாகவும் எழுதியிருக்கிறார்.

பெருமழைப் புலவர் சோமசுந்தரனார்



மறைவுக்குப் பிறகு இவரின் இரண்டு மகன்களும் வறுமைக்குள்ளானார்கள்.

அப்போது தமிழக முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள், பெருமழைப் புலவரின் தமிழ்த் தொண்டு, ஆற்றிய பணிகள், எழுதிய உரைகள் அவைகளின் சிறப்புகளை விரிவாக எடுத்துச் சொல்லி அவரின் குடும்பம் இருக்கும் வறுமை நிலையைச் சுட்டிக் காட்டி அவரின் மகன்களுக்கு 17.09.2010 ஆம் நாள் ரூபாய் 10 லட்சம் நிதியுதவி செய்தார்.

கலைஞரின் இந்த அரசாணை விளக்கத்தில் பெருமழைப்புலவரின் நூல்களை நாட்டுடைமையாக்க சில இடர்கள் இருப்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

மேலப் பெருமழை ஊரின் ஊராட்சி நூலகம் பொ.வே.சோமசுந்தரனார் நினைவாக அவரின் பெயரிலேயே இயங்கி வருகிறது.

இவர் ஒரு கவிஞரும் ஆவர்.

தஞ்சாவூரில் ஒரு முறை சூறாவளியுடன் கடுமையான மழை பெய்து பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது.

அதைப் பார்த்த நம் பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனார் நெஞ்சம் நெகிழ்ந்து எழுதிய கவிதையின் ஒரு பகுதி –

**"எளியோர்கள் சிறுகுடிலும் எழிலோங்கு**
**மாளிகையும் இரைந்து சீறித்**
**துளியோங்கு மழையோடே சூறாவளி**
**சாடுதலால் சுவர்கள் சாயப்**
**புளியோங்கு மாமரமே தென்னைமரம்**
**வாழைமரம் புல்பூண் டோடே**
**களியோங்கு பைங்கூழும் கரும்புகளும்**
**பாழாகிக் கழிந்த வாறே!"**

Karunchattai Tamilar. Date of Publication 12th and 28th of Every Month.
Registered with Registrar of News paper for India No: TN TAM/2009/32719, Post Regd No: TN/CH(C)/427/2016-18,
Licenced to post WPP No: TN/PMG(CCR)WPP - 206/2016-18



# 8

**தொழில்நுட்ப அகராதி** Tamil Technical Dictionary




சிவதி

மொழி பெயர்ப்பு என்பது அற்புதமான கலை. எந்த கலைப்படைப்பாக இருப்பினும் அதனை நமது தாய் மொழியில் படிப்பது என்பதற்கு ஈடானது ஏதுமில்லை. ஆனால் வாசகனைச் சரியாய் போய்ச் சேர சரியான சொற்கள் தேவை.

சாதாரணமாக நாம் வைத்திருக்கும் அகர முதலியில் நுணுக்கமாக சொற்களுக்கான பொருள்கள் கிடைப்பதில்லை. அதற்கெனவே தனியே இருக்கும் சொல்லடைவுகள்தான் பொருத்தமாக இருக்கும். அப்படியான சொல்லடைவுகளும் (Glossary) வேளாண்மை, நிர்வாகம், தாவரவியல் எனத் தேடித் தேடி பெருமதிப்பு கொடுத்து வாங்க வேண்டியிருக்கும்.

இவையெல்லாம் ஒருங்கிணைந்து நம் கைக்குள் கிடைத்தால் எப்படி இருக்கும். அவ்வாறு நம் தேவையினை நிறைவு செய்யும் நோக்கத்தை எளிதாக சாதித்துக் காட்டுகிறது.

Google Play Store சென்று Tamil Technical Dictionary தரவிறக்கம் செய்து கொள்ளுங்கள்.

ஆங்கிலத்திலோ அல்லது தமிழிலோ தட்டச்சு செய்யுங்கள். மிக எளிதாக சரியான சொற்களை கண்டறிவீர்கள். இனி ஆங்கிலத்தில் உள்ள தொழில் நுட்ப சொற்களை ஆங்கிலத்திலேயே எழுதுவதை நாம் தவிர்க்கலாம்.

பாடபுத்தகத்தை தமிழில் வடிவமைப்பவருக்கு, ஆங்கிலத்தில் படிப்பவருக்குத் தொழில் நுட்பச் சொற்களுக்கு இணையான சொற்களைக் கண்டறிந்து புரிந்து கொண்டு படிப்பது. அறிவியல் பூர்வமான செய்திகளை மொழிபெயர்ப்பு செய்பவர்களுக்கு உதவியாக இருக்கும்.

ஆங்கிலத்தில் நீதிமன்ற வழக்கு மொழி சற்று கடினமாக இருக்கும். இந்த செயலியின் துணைகொண்டு ஈடான தமிழ் சொற்களை நாம் கண்டறியவும் பயன்படுத்தவும் முடியும். வேளாண்மை, நிர்வாகம், வானியல், உயிரியல், தாவரவியல், சூழலியல், புவியியல் என 31 துறைகளுக்கான சொல்லடைவுகள் உள்ளன.

ஆங்கிலத்தில் சொற்களைப் பேசினால் தட்டச்சு செய்யும் வசதி, அடிக்கடி தேடப்படும் சொற்கள் என்ற வசதிகள் உள்ளன. எப்படி ஒரு தொழில் நுட்பச் சொல்லை உச்சரிக்க வேண்டும் என்பதற்கான ஒலி வடிவ அமைப்பும் நிறுவியுள்ளனர். மாணவர்கள், மொழிபெயர்ப்பாளர், கல்வியாளர், தீவிரத்தேடல் உடையோர், வழக்குரைஞர் என சான்றோர்களை இச்செயலி வெகுவாகக் கவரும் என்பதில் ஐயமில்லை.

சொற்கள் இல்லை என்றாலும் கூட நாமே உருவாக்க முயற்சி செய்தல் நலம்தானே. இந்தச் செயலியை நிறுவக் கீழ்கண்டுள்ள இணைப்பைச் சொடுக்கவும்

https://play.google.com/store/apps/details?id=nithra.technicaldictionary

# வெட்கம்

தமிழ்நன்

**ஐம்பது பொன்னம் நகை**<br>
**ஐம்பதாயிரம் பணம்**<br>
**கழுத்திற்குத் தொடரி**<br>
**விரலுக்குக் கணையாழி**<br>
**போகவரத் துள்ளுந்து**<br>
**கட்டில்**<br>
**மெத்தை**<br>
**நிலைப்பேழை**<br>
**கலக்கி**<br>
**அரைவைப்பொறி**<br>
**சலவைப்பொறி**<br>
**குளிர்ப்பேழை**<br>
**ஏனங்கள்**<br>
**திருமணச் செலவு மொத்தம்**<br>
**என எல்லாம் கொடுத்து**<br>
**எல்லாம் முடிந்து**<br>
**பால் சொம்புக் குவளையுடன்**<br>
**உள்ளே நுழைந்தாள்**<br>
**வெட்கப்பட்டுக்கொண்டே அவள்**<br>
**உள்ளே இருந்தான்**<br>
**வெட்கமில்லாமல் அவன்.**

Tamil Fortnightly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP

Posted: 2 March 2017

பெறுநர்/To

திரு

அனுப்புனர்/From

கருஞ்சட்டைத் தமிழர்
122/130, என்.டி.ஆர். தெரு,
ரங்கராசபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
பேச : 044 - 42047162

Karunchattai Tamilar
122/130, N.T.R. St.,
Rengarajapuram, Kodambakkam,
Chennai - 600 024.

Owned and published by G. Dinakaran, From 7/8, Peters Colony, Rayapettah, Chennai - 14, and Printed by R.B. Anandababu at Cosmic Printers,
12 Oil Monger Street, Triplicane, Chennai -5. Editor : Suba. Veerapandian